DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.204/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 15 | நாள் | : | 14.11.2025 |
| பெயர் | : | டாக்டர் ப்ரீத்தி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 14th day of November 2025.

**சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கூடங்குளம் அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ART மையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்தபோது குருவிகுளம் காவல் நிலைய கு.எண்.239/2021 வழக்கில் தொடர்புடைய லட்சுமணத்துரை என்ற பால்துரை மற்றும் தனலட்சுமி ஆகியோர்களின் HIV பரிசோதனைக்கான சான்று வழங்க வேண்டி கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்றுக் கொண்டு மருத்துவமனை ஆவணங்களை பார்வையிட்டபோது மேற்படி பால்துரை என்பவர் எங்கள் ART மையத்தில் வரிசை எண்.521/2011 ன்படியும் தனலட்சுமி என்பவர்

748/2007 மற்றும் 417/2011 ன் படியும் HIV பாதிக்கப்பட்ட நபர்களாக கண்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்கள் என்பது குறித்து ஆவணங்களின் அடிப்படையில் நான் சான்று வழங்கினேன் நான் வழங்கிய சான்று அ.சா.ஆ.20 மற்றும் 21 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை இல்லை**

சாட்சி நாகர்கோவில் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி காட்சி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் திருமதி. சகாயராணி (Typist), The Principal District and Sessions Court, Kanniyakumari @ Nagercoil என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் முதல் நிலை எழுத்தர் நிலை எண்-1 முருகன் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.14 17:07:22 +0530